ஓலை 31 | ஓசை 125 | சனவரி 2023

# அகர முதல இலக்கிய பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# அறிவோம் வள்ளுவம்!



**சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு**
**பேராண்மை வேண்டு பவர்.**

புகழுடன் தன் குடும்பப் பெருமையை நிலைநாட்ட விரும்புபவர் புகழுக்குரியவற்றைச் செய்யும்போதும் தம் குடும்பப் பெருமைக்கு ஏற்காத இழிவுகளைச் செய்யமாட்டார்.

**Translation:**

Who seek with glory to combine
honour's untarnished fame,
Do no inglorious deeds, though
men accord them glory's name.

**Explanation:**

Those who desire (to maintain their) honour, will surely do nothing dishonourable, even for the sake of fame

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

அகர முதல இலக்கிய பேரவை

அகரமும் தமிழே!
முதலும் தமிழே!!

**நிர்வாக குழு**

## கு.செல்வமுத்துக்குமரன்

## சிவம் அறக்கட்டளை

**ஆசிரியர்கள்**

## அ.வில்சன்

## குமர.தர்மசீலன்

**வடிவமைப்பு**

## அ.வில்சன்

## அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001


# அகர முதல இலக்கிய பேரவை


Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# தமிழுக்கு தலைவணங்கு

(காய் காய் மா தேமா)

தரணியெங்கும்
தலைத்தோங்கும்
தமிழே தாயே
தமிழன்நான் எனும்செருக்கு
நெஞ்சில் உண்டே

அரணாக உனைகாக்கும்
உயிரும் மெய்யும்
ஆழமான தமிழ்ப்பற்றை
என்றும் ஊட்டும்

மரணிக்கும் வரையிலுமே
மறவேன் உன்னை
மகத்தான தாய்மொழியை
கொண்டேன் நானே

உரக்கச்சொல் உயர்ந்தமொழி
எந்தன் நாடி
உயிருக்கும் மேலான
உணர்வும் கோடி

விரல்விட்டு சொல்லிவிடும்
தொன்மை கொண்ட
விந்தைதரும் மொழிகளிலே
தமிழும் ஒன்றே

பரப்புரைகள் ஏதுமின்றி
காலம் வென்ற
பாங்கான செம்மொழியாம்
எங்கள் தாயே

தரமிக்க தமிழ்மொழியை
தவமாய் பெற்று
தனிதமிட்டே (முழக்கம்) வென்றிட்டேன்
தனிமை கொன்றே

உரச்சதமாய்(கவசம்) எனைக்காக்கும்
தமிழும் வந்து
உயர்த்தியதே வாழ்க்கையிலே
பரிசும் தந்து

பரம்பொருள்போல்
அழிவில்லா தமிழே வாழி
பண்பாடு செப்பனிடும்
மொழியே வாழி

வரலாறே வரலாறு
படைக்கும் பாடி
வல்லமைகள் பெற்றிட்ட
தமிழால் கூடி

தரத்தினிலே மின்னிடுமே
வைரம் போல
தமிழுக்கு தலைவணங்கு
புவியின் மேலே

வரவாக வந்தாயே
வாழ்வில் நீயும்
வரமாக கிடைத்ததுவே
கவியும் தாயே

கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# ஆறா(து) அறிவு

விளையும் கனி அறிவதில்லை
விதையும் சுவையல்ல
சதையும் சுவையல்ல

மலரும் பூ அறிவதில்லை
வாசமும் நிலையல்ல
வண்ணமும் நிலையல்ல

உதிரும் இலை அறிவதில்லை
முதலும் நாமல்ல
முடிவும் நாமல்ல

உதிர்க்கும் மரம் அறிவதில்லை
இலையும் சுமையல்ல
கிளையும் சுமையல்ல

ஊன்றும் வேர் அறிவதில்லை
நீரும் தனதல்ல
மண்ணும் தனதல்ல

தாங்கும் நிலம் அறிவதில்லை
காற்றும் கனமல்ல
வேலியும் கனமல்ல

இயற்கையின் இயல்பில்
இளைப்பாறா மனிதன்
இதயத்தில் நிறுத்துவது
இடுக்கண் என்க.




கவிஞர் இளையவன் சிவா,மடத்துக்குளம்

அகர முதல

# நான் வியந்த தலைவர்-நரேந்திர மோடி

கர்ம வீரரின் கதையறிந்த நாள்முதலாய்
காண்பேனா இன்னொருவரை இனியென
கணந்தோறும் எண்ணி வந்தேன்

அதிகாரம் வந்ததும் அகங்காரங் கொண்டோர் மத்தியில்
அணுவளவும் சுயநலங் கொள்ளாமல்
ஆள்வதற்கு யாரும் இல்லையென் றெண்ணினேன்

அரசியல்வாதி யெல்லாம் அவரவர் நலமெண்ணும்
அகந்தை கொண்டவரென்ற எண்ணம் மறைய
அறவாளனாய் தோன்றினார் ஒருவர்

தேநீர் விற்றுத் திரிந்தவரெல்லாம் - இத்
தேசத்தின் தலைவராயென
தூற்றியவர் பணியும்படி ஆளவந்தார்

எதிர்துருவமாயிருந்த பல நாடுகளை
நட்பாலும் தன் நடவடிக்கையாலும் தன்வசமிழுத்து
உலகையே திரும்பிப் பார்க்க வைத்தார்

அதிரடியாக எடுத்த பல்வேறு முடிவுகளால்
அடுத்தடுத்து பல சிக்கல்கள் வந்திடினும்
அசராமல் கொண்ட உறுதியில் நின்றார்

இத்தனைக்கும் மேலாக
இணையத்தில் கண்ட செய்தியில்
இமைக்கவும் மறந்தேன் சில நொடிகள்

அன்னையின் ஈமச்சடங்கை முடித்த கையோடு
அடுத்த பணியைப் பார்க்க
அன்றே கிளம்பி நாடே வியக்கச் செய்தாரே

பதவியும் அதிகாரமும் தன்வசமிருந்தும்
பகட்டு காட்டாத எளியவரைக் கண்டு
புகழ வார்த்தையின்றி வியப்பில் நான்!



கவிஞர் அ.தசிகா தமிழ்,சேலம் மாவட்டம்

# தவ வலிமை

(அதிகாரம் : 27)




தம்துன்பம் ஏற்றலும்
பிறர்க்கு துன்பமிழைக்காததும்.
ஆகிய அவ்வளவே
தவவலிமையின் வடிவமாம்.

தவநெறிக்கு ஏற்ற
திடமான மனவியல்பை.
கொண்ட மாந்தர்க்கே
தவக்கோலம் பொருந்தும்.

துறவியர்க்கு உணவுதந்து
உதவுதலின் பொருட்டே.
இல்லறத்தார் தவம்செய்தலை
தன்னிலையில் மறந்தார்போலும்.

பகைவர்தமை அடக்குதலும்
நல்நண்பரை உணர்தலும்.
நினைத்ததும் நடப்பது
தவத்தின் பயனாலே.

விரும்பியதை விரும்பியவாறே
பெறும் தவவலிமையை.
இல்லறத்தின் வாழ்விலும்
முயன்றால் பெற்றுவிடலாம்.

தவஞ்செய்வோரே தன்கடமையை
சரியாகச் செய்பவராவர்.
அல்லாதோர் தீங்கிழைக்கும்
ஆசைவலைக்குள் சிக்குண்டோராவர்.

தவஞ்செய்வோர் வருந்துன்பத்தால்
நிஜமான மெய்யுணர்வடைந்து.
புடமிடப்பட்ட பொன்போல
சுடர்விட்டு ஒளிர்வர்.

தான் எனுஞ்செருக்கு
நீங்கிய தவவலியுடையோரை.
தரணியின் உயிர்களெல்லாம்
மேன்மையாய் தொழுதேற்றும்.

தவத்தின் ஆன்மவலிமையால்
தம்மிடமிருந்தே தமக்குவரும்.
கூற்றினையும் எதிர்த்து
வென்றிடுவர் ஞானிகள்.

தவம்செய்வோர் சிலராயும்
செய்யாதோர் பலராயுமிருப்பதாலே.
உலகில் மெய்யறிவற்றோர்
பெருங்கூட்டமாய் உள்ளனர்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# அந்தாதி

## ஏட்டு, பாட்டு, மேட்டு,காட்டு
## (அந்தாதி)

பனைவோலை தந்ததே
பாங்கான ஏட்டுச்சுவடி.

ஏட்டுச்சுவடியிலே
எழுத்தாணியால்
எழுதினர் பாட்டுகளை.

பாட்டுகளை இசையோடு
மேட்டில் ஏறிப் பாடினரே.

பாடிய பாட்டுகள்
காற்றில் கலந்தனவே.

கலந்தவை மக்களுக்கு
நல்வழி காட்டினவே.

காட்டிய நன்னெறி
வழியே சென்றனரே.

சென்றவர்கள் மன
மகிழ்ச்சி கொண்டனரே.

கொண்டதும் ஆடிப்பாடி
ஆனந்த நடனம் ஆடினரே.

ஆடியவரோடு பாடியே தம்
களைப்பை அகற்றினரே.



அகற்றியதால் புது சிந்தனைகள்
பெருகியதே.

பெருகியதை ஏட்டில்
எழுதிக் குவித்தனரே.

குவித்தவை நாடெங்கும்
பரவி சிறந்ததுவே.

சிறந்ததனால் மக்கள்
நெஞ்சில் பதிந்தனவே.

பதிந்ததனால் மேட்டுக்
குடியினரும் நாகரிகம்
பேணினரே.

பேணிட நல்லதொரு
குடும்பம் உருவாகினவே.

உருவானதால் ஆற்றலோடு
அறிவும்
பெருகினவே.

பெருகிடக் காரணம்
மேட்டுக் காட்டில் விளைந்த
பனையே!

கவிஞர் செ.கலைவாணி,மேட்டூர்அணை

# என் நடை



இந்த காலைநேரத்தில்
அந்த அறையை
சுறுசுறுப்புப்புடன்
கடந்துச் செல்ல
எனக்கு
நான்கு நொடிகள்
போதுமானது.
இருப்பினும்
மூன்று நொடிகளை
கூடுதலாகவே
எடுத்துக் கொள்கிறது
என் நடை.
ஏழு நொடிகளிலும்
நொடிக்கொரு
சுவரமென்று இசைக்கிறது
அத்தம்பதியரின்
அறையிலிருந்து
கதவிடுக்கின் வழியே கசியும்
முத்தச் சத்தமும்
கைவளையோசையும்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# கம்மஞ்சோறு கடஞ்செடுத்து

கம்மஞ்சோறு கடஞ்செடுத்து
கழனிப்பக்கம் போறவளே

ஏ மகராசி வரவ பாத்து
கொழுந்து விட்டறியும் வெயிலினிலும்
உச்சி குளிருதடி

ஏ குலராணி
கொலுசொலி கேட்டு
கொள்ளப் பசியும் ஓட்டம் எடுக்குதடி

ஏ மாமான்னு நீ கூப்பிடயில்
மனசெல்லாம் மத்தாப்பு பூக்குதடி

கம்மஞ்சோறு கடஞ்செடுத்து
கழனி பக்கம் வந்தவளே
கடைசி சோறு வர
எனக்கு ஊட்டி விட்டவளே

ஆசயோட நானும் தின்ன
பாசத்தோட பார்த்தவளே

ஒ மொகத்த பார்க்கையிலே
வெட்கத்துல செவந்தவளே

கூடவே நீ இருந்தா
ராஜாவா நா இருப்பேன்

கஷ்டம் எல்லாம் பறக்குமடி
ஒநெனப்பு மட்டும் இருக்குமடி



கவிஞர் நுஸ்ஹா அஸீம்,ஓட்ட மாவடி

# நஞ்சுண்ணல்

இயற்கையை மறந்தோம்
செயற்கையை அரவணைத்தோம்
காலத்தின் கட்டாயம் இதுவாகியதே.



மண்ணை மலடாக்கினோம்
உணவை உண்டது போய்
நஞ்சை உண்ணும் நிலைமையை
கொண்டு வந்தோம்.

மண் மட்டும் மலடாகவில்லை
செயற்கை உணவு பொருட்களையும்
துரித உணவாக்கி உட்கொண்டோம்
உட்கொள்கிறோம்.

எங்கேயும் கருத்தரிப்பு நிலையங்கள்
வரிசை கட்டி நிற்கிறது
காரணம் யார்?
இயற்கையா?
இல்லை
நீயும் நானுமே.



இனிமேலாவது
இயற்கையைப் பாதுகாப்போம்.
இயற்கையாக
மழலைச் செல்வங்களைப் பெறுவோம்

அவர்கள் ஆரோக்கியமாக வாழ
மண்ணில் நஞ்சை  விதைக்காமல்
நன் செய்!
நிலமாக்குவோமே.

கவிஞர் சுமதி தசதரன்,சென்னை

# புகைப்படம்



நினைவுகளில் நீந்திடும்
நல்ல நல்ல நிகழ்வுகளை
நித்தம் நித்தம்
புரட்டிப் பார்க்க!
கண்ணிலே நிறைந்திட்ட
காட்சிதனைக் காலமெல்லாம்
புரட்டிப் பார்க்க!
நிஜமாய் நாமிருக்க
நிழலாய் சுவற்றினை
அலங்கரிக்குதே வண்ண
வண்ணப் புகைப்படம்!

கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.73

# கோபுர தரிசனம்

கோபுரம் என்றால் இறைவனே
புரம் என்றால் இருப்பிடமே
இறைவன் இருப்பிடம் கோபுரமே
எங்கிருந்துப் பார்த்தாலும் தெரியுமே
கோவிலுக்கு அழகு தருவது கோபுரமே
கோபுரம் இருக்கும் இடமும்
நமது பார்வையில் படும் இடமும்
பூலோக கைலாசம் எனப்படுமே
கோபுர தரிசனம் கோடி புண்ணியமே
சிற்பியின் கலை வண்ணமே
ஆண்டுகள் கடந்தாலும் ஞாபகம் சொல்லுமே
பழமையும் பெருமையும் வாய்ந்ததே
அரசின் சின்னமும் கோபுரமே
கோபுர உச்சிக்கு கலகம் முக்கியமே
புறாக்கள் வந்து தங்கி செல்லுமே
ஆலய வழிப்பாட்டுக்கு செல்ல முடியாதவரும்
தூரத்தில் நின்று வழிப்பட்டு செல்வாரே
கண்கள் பார்க்க அழகு தருமே
பெரியவர் முதல் சிறியவர் வரை
அண்ணாந்து பார்த்து
வியப்படைய செய்வது கோபுர தரிசனமே



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# மனதில் உறுதி வேண்டும்

மனதில் உறுதியோடு
நிமிர்ந்து பேசிட
துணிந்து புறப்படு
துயில் கலைத்து
நேர்கொண்ட பார்வையில்
உலகையும் வசமாக்க
முடியுமென நினைத்து
முயற்சியையும் விதைத்திடு
உனக்குள்ளும் விளையும்
நம்பிக்கை விருட்சம்
எதிர்வரும் சவால்களை
எரிமலையாய் பொசுக்கிட
அதிகார நாற்காலிகளின்
அநீதியை அகற்றவும்
அக்னி பிழம்பாய்
சுடர்விட்டு எரிந்திடு
ஓடும் ரத்தம்போல்
ஓயாமல் ஓடு
உனக்கான விடியலும்
விடியாமலிருப்பதை தேடி



கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# சந்திப்பு

பறவைகளுக்கு
மரணத்தை தவிர
வாழ்வில் வேறு பிரிவுகள் இல்லை
ஆனால் மனிதனுக்கோ
மரணம் வருவதற்கு முன்பே
வாழ்வில் பல பிரிவுகள் தோன்றுகிறது
ஏனெனில்
பறவைகளுக்கு ஆறு அறிவு இல்லை
அவைகள் அதிகமாக சிந்திப்பதும் இல்லை
ஆனால் மனிதனுக்கு
ஆறறிவு உண்டு
அவன் அளவுக்கு அதிகமாக
சிந்திக்கிறான்
வாழ்வில் பிரிவுகளை சந்திக்கிறான்



கவிஞர் அகிலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம்(இலங்கை)

# நீண்ட நேர உரையாடல்கள்

அறிவை பெருக்கும் பல தகவல்கள் பரிமாற்றம்
சில பொழுதுபோக்கு கேளிக்கைகளும்
எங்களுக்குள்ளே
வழிகாட்டியும்
வழிநடத்தியும்
செல்கின்றனர் தமக்கைமார்கள்
பிரியமாய்
கோகிலமாய்
தமிழின் அரசியாய்
என் நலம் விரும்பியாய்
அனுதினமும் தொடரட்டும்
இந்த நீண்ட நேர உரையாடல்கள்.



கவிஞர் பெ.தனலட்சுமி,ஈரோடு மாவட்டம்

# சுடர் விட்ட ஓவியம்

நிலவின் ஒளியில்
நீயும் நானும்.



தொடர்ந்து செல்கிறது
தொடர்புடைய உறவு.

வரலாற்றுச் சுவடுகளை
வளமோடு நீபடைக்க.

வருங்காலம் காத்திருக்கு
வருடமெல்லாம் பூத்திருக்கு.

அறிவிழந்த மக்களை
அறிவொளியில் சிறகடிக்க.

அலாவுதீன் காணாத
அற்புத விளக்கே.

ஆழ்ந்து சிந்திக்க
அறிவார்ந்த கருந்துளையில்.

கொள்ளையிட முடியாது
கொற்றவனுக்கும் அடங்காது.

அறியாமை கிணற்றினிலே
அறிவொளி ஊற்றெடுக்க.

நுகர்வதற்கு காத்திருக்கு
நூல்விழி பார்த்திருக்கு.

கரையேறி சென்றாலும்
கால்கடக்க நின்றாலும்

களவில்லா கல்வியினை
காலங்களில் நிலைத்திருக்க.

கார்முகிலாய் கற்றுக்கொண்டு
கார்காலமாய் மாறிடு.

நிலையான செல்வத்தை
நீண்டக்காலம் பெற்றிடு.

நிறைவான செல்வமுடன்
நீடூழி வாழ்ந்திரு.

கவிஞர் ஏ.தேவராஜ்,சென்னை

# என் தேசம்

வந்தோரை வாழ வைக்கும் தேசமடா
வன்முறையை அறுத்து எரியும் தீயடா
வன்மத்தை தூக்கி வீசும் தேசமடா
வயல்களால் உணவளிக்கும் அற்புத தேசமடா




இன மதம் பாராத ஐக்கியமடா
இனிமையாய் பேசி பழகிடும் மக்களடா
இயற்கையால் செழிக்கும் அரசன் இவனடா
இமயத்தை விஞ்ஞானத்தால் தொட்ட அறிஞனடா

ஏழை மக்களுக்கு உதவிடும் சேவகனடா
ஏட்டுக் கல்வியால் உயரத்தை அடைந்தவனடா
ஏமாற்றத்தை தட்டி கேட்கும் தேசமடா
ஏளனமடையாது தூக்கிவிடும் பண்பான தேசமடா

திட்டமிட்டு ஆட்சி செய்யும் தேசமடா
திருடர்களை ஒழித்துக் கட்டும் தேசமடா
தித்திக்கும் தமிழால் சூழ்ந்த தேசமடா
திருப்பங்களை கொண்டு ஆண்ட அரசனடா

இரத்தத்தால் சுதந்திரத்தை வென்ற வீரனடா
இரத்தத்துக்கும் அஞ்சாத சிங்கம் இவனடா
இந்தியா நாமம் கொண்டு பிறந்தவனடா
இணைந்து வாழும் சிறந்த பூமியடா

கவிஞர் ஜஸீரா ஜலீல், மலேசியா

# மண்

உருவம் செதுக்க
இறைவன் எடுத்த மூலப்பொருள்
உயிரினம் படைக்க
இறைவன் எடுத்த முதற்பொருள்




உயிரியல் தோட்டத்தின்
உற்பத்தி மேடை
உயிர்கள் மரித்துவிட்டால்
அதுவே அவைகளை
போர்த்திக் கொள்ளும் ஆடை

குழந்தை அள்ளித் தின்று
பசி தீர்த்ததும் அதனாலே
மன்னர்கள் ஆசைப்பட்டு
படை எடுத்ததும் அதனாலே

விதைத்த நெல்
பானையிலே சோறானதும் அதனாலே
கூறு போட்டு விற்றவன்
பணக்காரன் ஆனதும் அதனாலே

"அ" எழுதப் பழகியதும்
அதன் மேலே
ஆழ வெட்டி
நீர் பெற்றதும் அதன் கீழே

கவிஞர் ஹஸன் எம் பஜீத்,இலங்கை

# அழகு

இறைவன் படைப்பில் அனைத்தும் அழகு
கறையற்ற மனதுடன் அறியப் பழகு

கண்ணில் காணும் காட்சிகள் யாவும்
விண்ணும் மண்ணும் சாட்சியாய் கூறும்

அகமது அழகாய் இருந்திடும் போது
அனைத்தும் எழிலே அகிலத்தின் மீது

அன்புடன் அரவணைப்புடன் அணுகிடும் சமயம்
இன்பமும் பரவிடும் அனுதினம் இமயம்

உள்ளம் என்ற ஒன்றே காரணம்
அள்ளும் அழகை நன்றே தோரணம்

இரக்க சிந்தை உன் வசப்படுத்து
இனிக்க விந்தை அழகு ருசிதட்டு

அகக்கண் திறந்தால் இடுக்கண் இல்லையே
அரக்ககுணம் இறந்தால் இல்லையே தொல்லையே

அழகல்ல என்றொன்று அன்று என்றும்
அழகியலாய் மனசாட்சி வென்றிடும் எங்கும்

கவிஞர் பஸ்லா பர்ஸான்,காத்தான் குடி(இலங்கை)

# மௌனங்கள்

சில மௌனங்கள்
கலையாமலே இருக்கட்டும்.
அதுவே சிறந்த பயனை
உண்டாக்கும்.
காலம் கனியும் வரை
கவனங்கள் மௌனத்தின்
பக்கமே!



கவிஞர் சத்தியபானு ச

# கவி எழுதும் கண்கள்

திடீர்னு அவ கேட்டா
எல்லாருக்கும் கவிதை எழுதுற
எல்லாத்துக்கும் கவிதை எழுதுற
எனக்கு ஒரு கவிதை எழுது அப்படின்னு,
பாவம் தோக விரிச்சி ஆண் மயில் ஆட்டம் போட்ட
அப்புறமும் வராத மழைய மாதிரி
கவித வரல எனக்கு



அவ கண்ண பாத்தேன்
நல்லா பாத்தேன்
கொஞ்சமா யோசிச்சி சொன்ன

நீ மொத்த உடம்பையும் மூடி என்ன பிரோயோஜனம்
நீ மூடாம விட்ட உன் கண்ணு ரெண்டும் சொல்லிட்டு
உன் மொத்த அழகையும் அப்படின்னு.

நல்லா பாருங்க அவ கண்ண
நான் சொன்னது சரிதானே.

கவிஞர் ஆரூர்.சிவ.மணிவேல்

அகர முதல இலக்கிய பேரவை
அகரமும் தமிழே! முதலும் தமிழே!!

# பாசம்



மனதைத் தொட்டு
மகிழ்ந்திடும் பாசம்
மச்சான் நெஞ்சில்
மாசில்லா வருடும்

கொஞ்சி பேசும்
கொள்ளை கொள்ளும்
கொண்ட இதயம்
கோலம் போடும்

வஞ்சி மகளும்
வாரி அணைக்கும்
வைத்து நேசம்
வகுந்து எடுக்கும்

மஞ்சள் முகமும்
மாலை சூடும்
தஞ்சம் புகுந்து
தரணி வெல்லும்

மேனி தழுவிட
மெல்லென சிலிர்க்கும்
மோகம் கொள்ள
மோதுமே காதல்

இன்பம் உணர்வு
இனித்திடும் சுவை
இராகம் பாட
இதமாய்ச் சுரக்கும்

சந்தம் வீசிட
சிந்து பாடு
சாமரம் வீசும்
சல்லாபம் கொள்ளும்

கவிஞர் ஜெயா ஸ்ரீ,லண்டன்

# பழக்கத்தின் வழக்கமும் மாறாதே

பழக்கமான விளையாட்டுகள் தொலைந்தே
வலைதள விளையாட்டுகள் வழக்கமானதே
வாக்களிப்பது பண்டைய பழக்கம்
வாங்கிவிட்டு வாக்களிப்பது வழக்கமாகிவிட்டதே

இயற்கை இயல்பானது பழக்கம்
செயற்கையாக்கி செயலற்றுபோக வைப்பதே வழக்கம்
நோய் வருவது பழக்கம்தான்
நோயோடு வாழ்வதே வருங்கால வழக்கமாகிவிட்டதே

பண்டைய பழக்கத்தை பழக்கமும்
வழக்கமானால் வருங்கால வாழ்வதுவும் வளமாகுமே
கொடுக்கச் சொல்லி கெஞ்சுவதுபழக்கம்
கொடுத்த வரை கெஞ்சவைப்பதே
வாங்கியவரின் வழக்கம்



கஷ்ட நேரத்தில் கடவுளிடம் கையேந்துவது பழக்கம்
வரிசையில் நின்று பிரசாதம் வாங்குவதே வழக்கம்
பழக்கத்தால் வழக்கமும் வழக்கத்தால்
வழக்கமும் பரிணாமம்

பண்டைய பழக்கங்களை வாழ்வில்
வழக்கமாக்கினால் வாழ்வு வரமாகி வளமானதாகுமே
பழக்கத்தை பழங்கதையாக்கி
வழக்கத்திலே வீழுதே வருங்காலமுமே

பழக்கம் வழக்கமானால்
பழக்கமும் வழக்கமாகி
வாழ்வில் பழகிவிடுமே!

கவிஞர் நீலா சுபாஷ்,ஆக்கூர்

# சுவடுகள்

கால் வலிக்க நடந்த
உன் பாதச் சுவடுகளை
அலை வந்து மோதி
அழிப்பதாக
இருக்க வேண்டாம்

உன் பாதம் சுமந்து
வந்த சுமைகள் யாவும்
வாழ்வில் அழியாத
சுவடுகளாய் அவை
அமைந்திடட்டும்

நீ வரைந்த ஓவியங்கள்
அலை மோதும்
மணல் வெளியில்
கரைந்ததாய்
ஆகிவிட வேண்டாம்

கற்பனைகளில்
உன் நினைவுளியின்
செதுக்கல்கள் கூட
நிஜங்களான சுவடுகளாய்
நிரந்தரமாகட்டும்

இங்கு இருப்பதற்கும்
இறந்து மண்ணாவதற்கும்
இடையில் உள்ள
இடைவெளியன்றி
மண்ணான போதும்
நீ விட்டுச் செல்லும் சுவடுகள்
உன் பேர் சொல்லட்டும்

கவிஞர் செண்பகச் சோலையாள், ஆய்ஷ்

# ஏக்கம்

உள்ளம் ஊமையாகி
உணர்வுகள் அநாதையாகி
காலம் நகர்ந்து கொண்டிருக்கின்றது

வேலைப்பளுவும்
பொருட்களின் விலையேற்றமும்
உள்ளத்தைத் தாக்கிட
உணர்வுகள் உறங்கி
அடங்கியொடிங்கிப் போகின்றன

அரிதான வாழ்நாட்களை
அழகாகக் கழித்திட
தடையாக நிற்பவற்றைத்
தகர்த்தெறியும் வழியறியாது
விழி பிதுங்கி நிற்போர் பலர்
உழைப்புக்கேற்ற ஊதியமின்றி
உணர்வுகளை மிதிப்போரால்
தினம் தினம் அவதிப்படுவோரும் உளர்

துணிவும் நம்பிக்கையும்
நெஞ்சத்தில் துளிர்விட்டு
கன்னத்தில் வழிந்தோடும்
கண்ணீர் மறைந்திடும்
நாள்தான் என்றோ
ஏக்கப் பெருமூச்சுக்கள்
என்றுதான் தணியுமோ



கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர்,கம்பளை

# கவிதை சருகுகள்

கேட்பாரற்ற
குப்பைத் தொட்டிகளில்
எப்போதும் காத்திருக்கின்றன
உணவு பட்டியல்கள்
உயர்திணைக்கோ
அஃறிணைக்கோ

வாழை இலை
உணவுகள்
தரம் இழக்கின்றன
குடுவைகள்
கண்டாலும்
கல்தூக்க முடியா
காகங்கள்



பெரிதாக
சலசலக்கின்றன
விழும் முன்
ஒட்டிக்கொண்ட
கிளைகளிடம்
இலைகள் பேசும்
மௌன மொழிகள்

எத்தனையோ
பாத சுவடுகள்
எதையெதையோ
சுமந்தபடி
சாலை எங்கும்
தனிமை மட்டுமே
ஞானம் சுமந்தபடி

பின் தொடரும்
வாள்கள்
எப்போதும்
அறிவதில்லை
முன் கையில்
பூக்கள் இருப்பதை

கவிஞர் அன்னலெட்சுமி சரவணன், ஈரோடு

# இரா மின்வெட்டும்

தென்னை ஓலை நடுவே ஒளி பட்டுத் தெறிக்கும்
இருளின் ஒளிவிளக்காய் நட்சத்திரம்.

ஜன்னலோரம் மின்மினி வெளிச்சத்தில்
இலேசான
கடல் இறைச்சலோசை.

காதோரம் கரகரக்கும் நுளம்புகளின் கானம் பாட்டு.

இன்னிசையில் முட்டி போதும் மரங்களின் உரசல்

தேகம் பற்றிச் செல்லும் குளிர்க் காற்றை
சுவாசிக்கையிலென கவலைகள் கானலாகும்
அவ்வப்போதைய மின் வெட்டும் இயற்கையை அலசிடவே
என்றெண்ணம் தோன்றவைத்து விடுகிறதே.

கவிஞர் ஷபானா ஆதம் லெப்பை (ஓட்டமாவடி)

# கலர்பூந்தி மிக்சர்

வேற்றுமையில் ஒற்றுமையைப் பாடுகிறேன்;
வேறுவேறாய் எல்லோரையும் பிரிப்பதாலே
வாழவிங்கு வழியின்றி போகக்கூடும்;
வாழ்வுவேண்டின் ஒன்றுபடல் வேண்டுமென்பதாலே
வேற்றுமையில் ஒற்றுமையைப் பாடுகிறேன்!

சேரசோழ பாண்டியர்கள் நமையாண்டவேளை
சேர்ந்திருக்க தமிழப்போது உதவவில்லை;
அடிதடிக்கன்று நம்மிடையே பஞ்சமேமில்லை;
ஆனாலும்கூட இமயம்முதல் குமரி வரை
நம்மையொன்று நன்றாய் இனணத்திருந்து;
நானிங்கதனை இந்துத்துவா என்றேயுரைப்பேன்!




வடக்கில் வாழ்ந்தவன் தெற்குவந்தான்
வடக்கிலிருந்து தெற்குவந்த இராமன்வணங்கிய
இராமலிங்கனை வணங்கிப் போற்ற;
தெற்கில் வாழ்ந்தவன் வடக்குசென்றான்
தென்னாடுடைய சிவனார் காசியிலே
விஷ்வநாதராய் இருக்குமந்த அழகுகாண!
விதவிதமாய் உள்ளவாலயங்கள் அன்றுவாழ்ந்தோரை
நம்தேசத்தவராய் இணைத்தது ஒன்றாய்!
நாமும் விடுதலையடைந்து மூவர்ணக்கொடி
நம்கொடியென கொண்டுவிந்தியரெனப் பெயர் பெற்றோம்!

கொறிக்கும்தீனிகள் பலவுண்டிந்த பரந்தநாட்டில்;
கொறித்திருப்பீர்கள் நீங்களும்மிக்சர் என்றவொன்றை;
காராபூந்தி இனிப்புப்பூந்தி சேவுநிலக்கட லையெனபலவும்
கலந்தகலவை மிக்சரானதுபோல் பலமொழிகள்
பலமதங்கள் இனங்கள்கலந்து இந்தியரானோம்!

இனிப்புப்பூந்தியில் பலவண்ணமிருப் பதுபோல்நாம்
இதயத்தாலிணைந்து என்றென்றுமிந்திய ராய்வாழ்வோம்!
இந்நாடுவிந்தியத் திருநாடுபழம் பெருநாடுவது
இம்மண்ணில்மிகச் சிறந்தவொருகுடி யரசதைப்பாடுநீ!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

# நேற்று போல் இன்று இல்லை



நேற்று போல் இன்று இல்லை
இன்று போல் நாளை இல்லை
அன்று போல் என்றும் இல்லை
அன்று போல் வேறென்றைக்கும்
இருக்கப் போவதில்லை
பொய்த்துப்போன பூடகங்களின்
நீட்டி முழக்குகைகள்
நெஞ்சமெங்கும் அமில மழை பெய்து செல்ல
நீர்த்துப்போன நேசத்தை
பிரித்துப் பிரித்து
ஞாபகங்கள் வாசிக்க
உடைந்து போன
கண்ணாடி துகள்களின் காயத்தில்
உள்ளத்தின் கண்ணீர்த் துளிகள் வடிய
சிடுசிடுத்த மழை போலாகிறது
நேற்றைய பந்தங்கள்
பழைய பாசக்கயிறுகள்
நேரடியாக நெருடிச்செல்லும்
நெருப்புப் பூக்களாய் உருவெடுத்து
சுவாலை எழுப்ப
அந்த கால
நேசம் நச்சரிப்பில்
நஞ்சாகும்
கனன்று எரிந்து சாம்பலாகும்
அந்த நேரங்களில்
சில பூமழை பொழிதல் போல்
ஒரு சில அரவணைப்புகள்
ஆறுதல் தருவது பேரதியசமே.
ஆம்
நேற்று போல் இன்று இல்லை
இன்று போல் நாளை இல்லை

கவிஞர் மரு.ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# பாச நாயகனே

விடுதலை பெற்ற இந்தியாவில் வாழும் எனக்கு,
உன்னிடம் மட்டும்
இறுதிவரை விடுதலை பெற விருப்பமில்லை.



கவிஞர் பெ.சுரேகா,திண்டுக்கல்

# கார்முகில்

நல்லன அல்லாத செயல்களுக்கு
கருமை நிறத்தைக் கொடுத்த மனிதன்!
கருமையிலும் நல்லன உண்டென
இயற்கை காட்டி விட்டது!
கருமை நிறம் கொண்ட மேகங்கள்!
வையத்தை வாழ வைக்க
மழையாய் மண்ணில் இறங்கி
சகல ஜீவராசிகளையும் குளிர்விக்கும்!
மனிதனின் சுரண்டும் குணத்தில்
காலம் தவறி பெய்தாலும்
உயிர்ப்பைத் தன்னுள் நிறைந்திருக்கும் கார்முகிலே!
பசுமை செழிக்க உயிர் உய்ய,
தாகம் தீர்க்க, மழையாய்
தண்ணென்று இறங்கிடுவாய்!
நன்னிலம் போற்றிட!

கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.73

# மௌனம் பேசிய வார்த்தை

உன் மௌனம் என்னை கொல்லுதே
ஒவ்வொரு பார்வையும் ஏதோ சொல்லத் துடிக்கிறதே
சொல்லாமல் அப்படியே சென்றுவிடுகிறாயே?
காத்திருத்தலும் சுகமே காக்க வைப்பதில் என்ன சுகம்?

எத்தனை வார்த்தைகளும் தராத வேதனையை
உன் மௌன மொழி அள்ளித் தெளிக்கிறதே
சட்டென பேசிவிடு சடாரென புரிந்துக்கொள்கிறேன்
புழுங்கிக் கொண்டிருக்கும் இதயம் சற்று இளைப்பாரட்டும்

சமுதாயத்தை சகிக்காமல் சப்தத்தை அடக்குகிறாய்
தேடிவந்தவளை தினம் விரட்டி அனுப்புகிறாய்
திரும்ப வந்திடாதே திருந்தி செல் என்கிறாய்
திருந்த வேண்டியது நானா இச்சமூகமா?

என் காதலுக்கும் இத்தனை வலிமையா?
பேசத் தெரிந்தவன் ஊமையாகிப் போனான்
கேட்கும் திறன் கொண்டவன் செவிடனானான்
இதயம் கல்லாகியும் இயங்கிக் கொண்டிருக்கிறானே?



உன்னைச் சொல்லி குற்றமில்லை
சினிமா கதாநாயகன் இல்லையே நீ
சாமானியன் தானே ! சாதியை எதிர்த்திடுவாயோ?
மதம் மாறுவதை விட
மனதை மாற்றுவது சுலபமல்லவா?

என்னவென்று சொல்வேன் உன்னை
காதலை சொல்ல துணிவில்லா கோழையென்றா?
குடும்பத்திற்காக காதலை இழந்த தியாகியென்றா?
காதலித்தவளின் மனதை உடைத்த பாவியென்றா?

என்ன சொன்னாலும் நீ மாறப் போவதுமில்லை
நீயே துணிந்தாலும் இச்சமூகம் விடப்போவதுமில்லை
சாதிகள் இல்லையடி பாப்பா என்றவனே
சாதிகள் இன்னும் சம்மணமிட்டு வாழுதையா

நீயும் என் காதலும் தான் மரணித்துவிட்டீர்கள்
மனிதம் காக்க மறுபடியும் பிறந்து வா பாரதியே

கவிஞர் பி.ரோஜாராணி,தேனி

# அவளால் அழிந்த என் வாழ்க்கை

அறம் கற்ற நான் காதல் என்னும்
புறத்தில் அழிந்து போனேன் - அவளால் அம்பியால்.
அவளை அன்று கண்டு காதல் கொண்டதால்
இன்று என் கனவுகளையும், கடமைகளையும் இழந்து தவிக்கிறேன்.

அவளை நான் தேடிப் போகவில்லை
காலத்தின் விதியில் நானும் அக்கணம் அடிமையே காதலுக்கு - அன்று
அவளால் என் ஆசைகள் இழந்தேன், அவள் தான் என் ஆசை என்று புரிந்தேன் .
பிறகு பிரிந்தாள் அரக்கி - அம்பி.

அவள் அகிலத்தில் சிறந்தவள் என்று நினைத்தேன்
ஆனால் அனாதையில் மிகுந்தவள் என்று
புரிய வைத்து விட்டாள் அரக்கி- அம்பி.
அன்று என் வீட்டில் நான் அரசன்
இன்று என் வீட்டில் நான் குருடன். அவளால்.

அவள் இல்லையெனில் என் வாழ்வில்
ஏமாற்றம் துரோகம் அன்பு நம்பிக்கை செல்வம் செல்வாக்கும்
மரியாதை எதிர்காலம் வருங்கால சேமிப்பு என் கனவுகள்
வளர்ச்சி நன்னடத்தை, காயமில்லா மனது
வருடங்களை இழந்திருக்க மாட்டேன்.
மதி கெட்டது என் வாழ்வில் தொட்டது.
அவளால் நடுத்தெருவில் இன்று விட்டது அரக்கி-அம்பியால்.

அவள் ஏமாற்றுவதிலும் குற்றத்திலும் திளைத்தவள் புரிந்தேன்
அவள் புறத்தில் மிகுந்தவள் ஆசையில் அழித்தவள்.
தீண்டாமையில் மிகுநதவள்.
நீ வாழ்க! உன் காலங்கள் வளர்க!

அரக்கியே அம்பியே -- பாதகையின் பாதை முள்ளுக்காடு
என் வீட்டில் கண்ணீர் மழை என் குருதி வழிந்து ஓடியது.
அன்று அவளால்.

அவள் ஒப்பனை :
(அ)ரக்கியின் (ம்)சை (பி)ழையின் (கா)யம்.
காலத்தில் கண்ணீரில் நான் அவள் அம்பு பட்ட காயத்தை விட
அம்பியால் வந்த அவமானமே அதிகம்.
இன்று காலத்தால் காயப்பட்ட பின்பே புரிந்து கொண்டேன் காதல்
பலரின் காயங்களின் பிறப்பிடம்.



அரக்கி அம்பி அவளை வரிகளால் வறுத்தெடுக்கவில்லை
என் வலிகளால் வரைந்து உள்ளேன்.
கடவுள் என்னும் நீதிபதி!
விலக்கி வைத்தது சரி!

நானும் சிறிது காலம் வாழ
காலத்தில் காதலில் களவு போகாமல்

கவிஞர் ம.செல்லமுத்து,நுத்தப்பூர்

# விலை போகா விவசாயி

கீழ்வானம் மெல்ல சிவக்க
பறவையின் ஒலியும் காற்றின் வேகமும்,
ஒளிக்கதிரவனின் சீண்டல் மனதை பதப்படுத்தும்.

வெறுவயிறும் பசி தீர்க்கும் நீர்க்கொண்டு
நீ குடிக்க ,
தன் தாயை பசிக்கொண்டு
நீ உண்டாம்.

தனக்கென உழவ ; உழைப்பை நீ நினைத்தால்
உன் வயிறும் காய்ந்ததும் ,
என் தேவை உனக்கறிய
நாள் தொடர்ந்து.

வியக்கத்தக்க விடையுடையார்
விண்மீன் தொடுவானம்
களம் கண்டும், ஏதோ
மண் மிதித்து பதம் கொடுக்க
நம் மனது திடம் கொடுப்பது இதுவே
போராடி முளைவிட்ட பயிரும்.



சுடும் வெயிலுக்கு என் இரத்தம் நீராய் கொடுத்து
உடல் சோர்வும் வேளை,
பருவம் தந்த பச்சை மிளகாய் நாளை பரிக்கச்சொல்ல ,
விலைக்கு போன என் பயிரும் விலை குறைய தந்திட ,
என் வயிறும் ஒரு நிலை அடைந்திடுமா.

கவிஞர் கனிதன் மா.சரவணன்,இலங்கை

# அப்பாவின் கைப்பேசி



ஒரு சத சார்ஜ்
குறைவாக இருந்தாலும்
உடனடியாக
நூறு ஐ நோக்கி
ஏற்றப் படுகிறது

குருஞ்செய்திகள்,
செயலி அறிவிப்புகள்
இன்னும் திறக்காமலேயே
சிகப்பு நிறத்தில்
குவிந்த வண்ணம் இருக்கிறது

ஊருக்கு என்றோ வரும்
என்னிடம் ஏலே, இந்த
குருஞ்செய்திகளை
எல்லாம் அளித்துக் கொடு
எனக் கேட்கும் அப்பா
அது என்ன செய்தி என
ஒரு நாளும் அறிய
ஆர்வப்பட்டதில்லை

அப்பா இப்படி தான்
புலனம் பயன்ப் படுத்தனும்
என பல முறை
சொல்லிக் கொடுத்தும்
இன்னும் ஒரு முறை கூட
பயன் படுத்தப் படாத
புலனம்

அப்பா இப்படித் தான்
புலனத்தில் ஷாட்டஸ்
பார்க்கனும்,
முகநூலில் எனது
படங்களைப் பார்க்கலாம்
என்று நான்
சொல்லிக் கொடுக்கும் போது
மட்டுமே பார்க்கும் அப்பா

அப்பா உங்கள மாதிரி
நம்ம பெரியப்பா,
பெரியம்மா
உங்களோட மூத்த
உறவினர்கள்
கைப்பேசியைப்
பயன்படுகிறார்கள்,
என்று சொல்லி நீங்களும்
பயன்படுத்துங்கள்
என்று சொன்னாலும்
அலட்டிக் கொள்ள அப்பா

ஆம் என்றாவது ஒரு நாள்
அப்பா ஆன்லைனில்
இருந்தால்
ஒரு சின்ன மகிழ்ச்சி
வந்து,போகும்
அப்பா கைப்பேசி
பயன்படுத்த
ஆரம்பத்து விட்டார்களா?
என நினைக்கும் போது
தான் தெரியும்
அண்ணன் ஊருக்கு
வந்திருக்கார் என்று.

கவிஞர் இரா.மதிராஜ்,அலப்பட்சக் கவுண்டன் புதூர்

# நாளை நமதே

வாழ்க்கையில் முழுவதுமாய்
துன்பம் என்றோ
முழுக்க முழுக்க இன்பம் என்றோ
சொன்னவர் எவரும் உண்டோ
இன்பம் பாதி துன்பம் பாதி என்று
வாழ்க்கை இருப்பதில் தானே
வாழ்வின் சுவாரஸ்யமான பக்கங்களே இருக்கின்றன



தோல்வி வரும் போது
துவண்டு விட வேண்டாம்
வெற்றியே வந்தாலும் வந்த பாதையை
மறந்திட வேண்டாம்
முயற்சியிலும், தீராத தேடலிலும்
தொலைந்து போனாலும் மன நிம்மதியைத்
தொலைத்து விட வேண்டாம்

இருப்பது எல்லாம் அதிஷ்டம் என்று கருதுங்கள்
தொலைந்தவை எல்லாம் துரதிஷ்டம் என நினையுங்கள்
சிறிய மகிழ்ச்சிகளைக் கொண்டாடுங்கள்
உறவுகள் சிதையாமல் காத்திடுங்கள்

இருளைக் கண்டு கலங்காதீர்கள்
நாளைய விடியலுக்கு இன்றைய இருளுக்கு நன்றி சொல்லுங்கள்
நாளை நமதே

கவிஞர் சுமையா சத்தார்,நெல்லியகம(அனுராதபுரம்)

# சொர்க்கமாகும் வாழ்விலே

உறவுக்கும் நட்புக்கும் போட்டி
மனிதனுக்கு யார் முக்கியமென
அடித்துக் கொண்ட அவர்கள்
அம்மனிதனிடமே கேட்க எண்ணி
முக்காலமுணர்ந்த முனிவரிடம்
எக்காலத்துக்குமான தீர்ப்பு கேட்க
வாதங்களை கேட்கலானார்
ஆதாயம் தேடுவதே உறவு
அடித்து சொன்னது நட்பு
நயாபைசாவில் கூட
நலிந்து போகும் நட்பு
நவின்றது உறவு
நெருங்கிய உறவும் கூட
நட்பாக பழகிடவே மனிதனின்
நாட்டம் என்றது நட்பு
மாமா மச்சானென நட்பையும்
உறவாக்குவதே மனித இயல்பு
உறவு உரக்க சொன்னது
குறை மட்டும் சொல்வதுஉறவு
குத்திப் பேசியது நட்பு
நட்பில் குறை கூறுவதில்லையோ?
நன்முனிவர் கேட்டிட
கண்டுகொள்ளாமல் விடுவது
என்றது நட்பு
துரோகம் நிறைந்தது உறவு
துடுக்காய் சொன்னது நட்பு
நட்பில் குறைவோ எனகேட்க
மறுக்க இயலாது என்றது நட்பு
இருதரப்பு வாதம் கேட்டவர்
இயம்பியது இங்ஙனமே
குற்றம் கண்டால் சுற்றமில்லை
சுற்றமென்பது நட்பும் உறவுமுமே
இருகண்கள் இருகைகள் இருகால்கள் இருக்கையிலே
எது பெரிது என ஆராய்வதில்லை
தூர இருக்கும் உறவவையும்
அருகிலிருக்கும் நட்பையும்
அரவணைத்து சென்றிட
அனைத்தும் சொர்க்கமாகும்
வாழ்விலே.



கவிஞர் ஷீலாதேவிஅருணாசலம்,நாகர்கோவில்

# சதுரங்கப் போர்முனை

நீயா? நானா?
என்று மோதிப்பார்ப்பது
ராஜாவுக்கு முன்னே
கேடயமாக நின்றிடும்
கருப்பும், வெள்ளையுமான
ராணிகளே!
ஆட்டமானாலும்
அனைத்து சாகசங்களையும்
காட்டி நாட்டைக் காத்திடும்
யூகம் படைத்தவளும் அவளே!
விளையாட்டிலாவது தலைமை
கொள்ளட்டும் என்று
முன்பே விதித்து விட்டனரோ?
மூதாதையர்;
வெல்வது ராணியானாலும்
மகுடம் சூட்டப்பட்ட
ராஜாவுக்குத் துணை
நின்று, கரம் பிடித்து
வாழ்வென்னும் போர்க்களத்தில்
எப்போதும் வெற்றி முகத்தை
மட்டுமே ராஜாவிடம்
காட்டுபவளும் இவளே;
அவளே இப்பிரபஞ்சம்
முழுமைக்கும் காவல்
என்று நின்றிடும்
ராணி என்னும் மகாசக்தி!



கவிஞர் மலர் அபி,சிதம்பரம்

# நீ தானே!

என் அன்பும் நீ தானே
என் அகிலமும் நீ தானே!

என் ஆசையும் நீ தானே
என் ஆருயிரும் நீ தானே!

என் இன்பமும் நீ தானே
என் இசையும் நீ தானே!

என் ஈர்ப்பும் நீ தானே
என் ஈதல் பண்பும் நீ தானே!

என் உதிரம் நீ தானே
என் உறவும் நீ தானே!

என் ஊக்கம் நீ தானே
என் ஊமை காதல் நீ தானே!



என் எதிர்பார்ப்பும் நீ தானே
என் எளிமையும் நீ தானே!

என் ஏக்கம் நீ தானே
என் ஏற்றமும் நீ தானே!

என் ஐஸ்வர்யம் நீ தானே
என் ஐம்புலனையும்
வென்றவள் நீ தானே!

என் ஒளிரும் காதல் நீ தானே
என் காதல் ஓசை நீ தானே
என் ஔடதம் நீ தானே!

என்னை
ஏற்று கொண்டவள் நீ தானே
என் அனைத்தும் நீ தானே!

கவிஞர் செ.வசந்தகுமார்,களரம்பட்டி

# தங்கங்களே

தமிழ் வைரங்களே
யாருமமை பட்டை தீட்டியது?
கோழைகளின் முகத்திலறைந்து,
காளைகளின் வீரத்தை கபடியாடச் செய்தது?
நினைத்துப் பார்க்கையில்,
நெஞ்மெங்கும் ஆச்சர்யங்களின் அணிவகுப்பு!
ஆன்ட்ராய்டுகளின் அடிமைகளாய்,
தலைகுனிந்தே தகப்பர் சொல்கேளா
தறுதலைகளாய்,
தாறுமாறாய் சித்தரிக்கப்படும் நீங்களா,
தமிழ்த் தலைமுறைகளின் கூனை.
தரணியில் நிமிர்த்தியது?
எம்மால் முடியாதது உம்மால்,
எனும்போது... தமிழுக்கும்,
தமிழனின் தன்மானத்திற்கும்
கிஞ்சித்தும் கேடில்லையென்ற
நம்பிக்கை வலுக்கிறது.
போராடாமலே புலம்பிக் கொண்டிருந்த எமக்கு
போராட்டத்தின் இலக்கணம் சொல்லி,
புதுரத்தம் பாய்த்தீர்!
அறவழியும், அகிம்சையும்
அண்ணல் காந்தியோடு அகலவில்லையென,
அகிலமே அதிர, அணிவகுத்து சொன்னீர்!
காளைக்கான போராட்டம் மட்டுமல்ல,
நாளைக்குமான போராட்டமேயென்று.
நாசூக்காய் சொல்லி,
நாட்டுக்கே நல்வழி காண்பித்தீர்!
அப்பருக்கே பாடம்சொன்ன சுப்பர்களே.
வாழ்க உங்கள் வீரம், வளர்க உங்கள் தீரம்.




ஈர நன்றிகளோடு...

கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி,திருச்சி

அகர முதல இலக்கிய பேரவை
அகழும் தமிழே!
முதலும் தமிழே!!

# கவிதை புனைவேன்

உறங்காத அலையே
தழுவும் பாதம்
தவழும் பருவம்
மனதில் வரித்ததை
மணல்வரியே
நீ மட்டும் அறிவாய்



அறிந்த மனதை
புரியாத கண்களில்
புதிரோடு இட்டு
புதைத்து விடு மணலே

சொந்தமென்று சிறுமணலில்
கட்டியவீடு சிதையாமல்
சில நிமிடம் காத்திராயோ
கடல் அலையே

இன்னும் நீளாதோ
கடற்கரை மணற்பரப்பு.

நம் பாதத் தடத்தின்
இடைவெளி நீண்டு
இல்லாது போய் புள்ளியில்
தொலைந்தே போனது

மங்காத நினைவுகள்
மனதில் பதித்து அலை மிரட்டலில்
மங்கிப் போகும் கடல்நீரில் யாவும்

உறங்காத அலையே
உற்றுப் பார்க்கும்
ஒருநொடி உறங்கேன்

உனை அணைத்து
உறங்காத சொற்பதம்
"கோர்த்தொரு"
கவிதை புனைவேன்

கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# நன்றி

ஏமாற்றியவர்களுக்கு நன்றி
ஏமாற்றத்தின் வலியை பிறருக்கு வழங்காதே எனும்
உள்ளுனர்வை கற்றுத்தந்தீர்கள்.

இரகசியங்களை அம்பளப்படுத்தியவர்களுக்கு நன்றி
உங்களைப் போல் துரோகிகள் உடனிருப்பார்கள் என்பதை
செயல் வடிவில் விளக்கினீர்கள்.

சிரித்துப் பேசி பின் முதுகில் குத்தியவர்களுக்கு நன்றி
பச்சோந்திகள் மனித வடிவிலும் இருக்கின்றார்கள் என்பதை
தெளிவுபடுத்தினீர்கள்.

பிறரைப்பற்றி என்னிடம் குறை கூறியவர்களுக்கு மிக்க நன்றி
உன்னையும் இப்படித்தான் பிறரிடம் கூறுவோமென்பதை
சொல்லாமல் சொல்லிச் சென்றீர்கள்.

பாசமெனும் பெயரில் உடனிருந்து பிரிந்தவர்களுக்கு நன்றி
வாழ்வின் பல அனுபவங்களை கற்றுத்தந்தீர்கள்.




இன்றுவரை ஒன்றாக பயணிக்கும் உறவுகளுக்கும்
இனிவரும் காலங்களில் பயணிக்கப் போகும்
உறவுகளுக்கும் பல கோடி நன்றிகள்.
ஏனெனில் நீங்களும் பெரிதாக எதையாவது கற்றுத்தருவீர்கள்.

கவிஞர் சனுபா தாஹிர்,திருகோணமலை (தம்பலகாமம்)

# தேடல்கள்



ஆடம்பரமதை எண்ணி மகிழ்ந்து
தேடலில் கரைந்து போகிறாய் மனிதா!

கடலில் விழுந்திட்ட சிறு ஊசியை
விடலைப் பருவத்திலே தேடித் திரிகிறாய்.

கண்களில் நீர் சுமக்கிறாய்
எண்ணத் தேடல் நிறைவேறாததாலே

விண்ணையும் நீ அளக்கலாம்
மண்ணில் தேடலை நீ குறைத்திட

பகட்டுக்காக தேடுகிறாய் பாசமதை மறந்து
அகமது உணர்த்திடினும் உணராமல் திரிகிறாயே

பாகற்காயாய் கசக்கிறது முன்னோர் கூறிய நன்மைகளும்
தேகத்தை தேடலிலே தொலைக்கிறாய் நிதமுமே

தேடு தேடு நன்மைதனைத் தேடு
நாடு நாடு அன்புதனை நாடு

விடு விடு சோம்பலை அறவே விடு
பாடுபடு என்றும் நேர்மையுடனே

துன்பம் தொலைந்து இன்பம் பெறுகவே!

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# புதுக்கவிதை

## சமத்துவம் பெருகட்டும்
## சமாதானம் நிலைக்கட்டும்

சமத்துவம் பெருகட்டும்
சமாதானம் நிலைக்கட்டும்;
சங்கநாதம் முழங்கட்டும்
சர்வமும் சமநிலையாகட்டும்

உலகம் உய்யட்டும்
உன்னதங்களை வழங்கட்டும் ;
உயர் கொள்கைகள்
உச்சங்களை சந்திக்கட்டும்



தொட்டு விடும்
தொடுவானம் முற்றங்களாகட்டும்
தொல்லைகள் இல்லா
தொகுதிகள் பெருகட்டும்

தொட்டிடுவோம் வெண்ணிலாவை
தொங்கும் தோட்டம்;
தொட்டில் கட்டி
தோரணமாய் உதிக்கட்டும்!

உதித்த சூரியனின்
உதயங்கள் உலவட்டும்
உலாப் போகும்
உல்லாசம் உறவாகட்டும்

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# ஆன்மீக சித்த புருஷர் திருமூலர்

பக்தி, யோகம், சித்து, மந்திரம், மருத்துவம்
இலக்கியம் இப்படி எல்லாத் துறையிலும்
சிறந்து அழுத்தமான, தன் நிகரில்லாத
பொன் மனச் செம்மல்.
மாணிக்க வாசகர் 4-ம் நூற்றாண்டில்
வாழ்ந்தவர் என்றால், இவரோ அதற்கும் முந்தி
வாழ்ந்தவர் என்பதே சிறப்பு.
சங்க காலத்தில் வாழ்ந்தவர் சங்க கால புலவர்.
சித்த புருஷர்கள் பூமிக்கு வந்த நோக்கமே.
மிக உயர்ந்த நோக்கமாகவே இருந்தது.
சைவ ஆகமங்களை இவ்வுலகில்
பரப்பவே திருமூலர் தோன்றினார்.
பெரிய புராணம் இயற்றிய சேக்கிழார்
பிறவி நோக்கம் பற்றி கூறுகையில்,
பொதிகை மலையில் அகத்திய மாமுனியுடன்
சில காலம் நட்புடன் இருந்ததாக சொல்லபட்டிருக்கிறது.



திருமூலர்

தாயுமானவர் திருமூலரின் அருளுக்காக ஏங்கியவர்.
இவரைப் பற்றி சிந்தித்தாலே பிறவி துன்பம் நீங்கும்.
மனித உடம்பானது பிறக்கும் போதே
நோயுடனும், பஞ்ச பூத சக்தியாலுமே என்கிறார்
நோய் நாடி நோய் முதல் நாடி, வள்ளுவ
பெருந்தகையின் வரிகளுக்கேற்ப
நோய்களுக்கான தீர்வையும் பகர்கின்றார்.
யோக கலையை குறிப்பிடுகையில்
"நூலறிவோடு, அனுபவமும் சேர்ந்திருந்தால்
மட்டுமே யோகம் கை கூடும்"
எண்ணில் அடங்கா தத்துவ ஞானி
நம் மண்ணின் மூத்த நீதிமான்!

கவிஞர் கிருஷ்ணவேணி.ஆ (ஊத்தங்கரை)

# ஜென் கவிதை



வானத்து மழை
கடலிலும் பெய்யும்
ஓடும் நதியிலும் பெய்யும்
வற்றிப்போன நதியிலும் பெய்யும்
சிறு பள்ளத்தையும் நிரப்பும்
ஏன்?
பசுவின் கால்தடத்தையும் நிரப்பும்.

கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,சென்னை

# விட்டுக் கொடுத்தால்




கவிஞர் லா.பெனிஸ்,திருநெல்வேலி திசையன்விளை

# எனக்கு பிடித்த ஒன்று

செவ்விதழ் திறந்து
செப்பிய மொழியில்
செந்தமிழ் கேட்டு
செவி சாய்த்தேன்
செல்ல மகள் குரல் கேட்டு நாளும்.

நாளும் செவ் வாய் திறக்க
சிறு சிறு வார்த்தைகள்
செங்கரும்பு சாறென சிதறி
செந்தேனாய் இனிக்க
தெவிட்டாமல் சுவைத்தேன்.

நாளும் கைப்பிடித்து நடைபழக
கால் கொலுசு சிணுசிணுங்க
காதோரம் கூக்குரல் ஒலிக்க
கள்ளச் சிரிப்பில் கரு வண்டு
கண்கள் சுழல மனமது உருகி நின்றேன்.

நாளும் சிப்பிக்குள் முத்தென
முத்தாய்ப்பாய் இருக்கும் மழலையும்
சிறு மல்லி வாசம் தரும் மனதையும் நித்தம் சுவாசித்தேன்

நாளும் சிறுபிள்ளை இவள் சேட்டையை
திகட்டாமல் ரசிக்க காண கண்கோடி வேண்டும்.

நாளும் ஆதாரமாய் வலம் வந்து
சேதாரமில்லா புன்னகையை அள்ளி வீச
மனம் மகிழ்ந்து கவிதையும் உருவாகும்.

நாளும் மழலை யென மாறியே
மாறாத அன்பை பெற்றிடுவேன்
இதழோரம் சிந்தும் புன்னகையில்
இரவின் மடியில் துயில் கொள்வேன்.

நாளும் மழலையின் நினைவுகளில்
நித்தமும் கலந்து இமையோரம் வழியும் சிறு துளியும்
ஆனந்த கண்ணீரில் நனைத்து
கற்கண்டாய் இனித்திடுவேன் எந்நாளும்.



கவிஞர் குணசுந்தரி சிவா,காஞ்சிபுரம்

அகர முதல இலக்கிய பேரவை
அகரமும் தமிழே! முதலும் தமிழே!!

# சிறுதானியத்தால் சிறப்புறும் இவ்வாண்டு(2023)!



நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமென்பர்!
நோய்தீர்க்கும் மருந்தாக உணவே விளங்கிடுமே!
சிறுதானிய உணவுக்கு இச்சிறப்பு உண்டென்பர்!
புரதம், நார்ச்சத்து, கால்சியம், இரும்புச்சத்து
நிறைந்திருக்கும் இவைகளிலே! நோய் எதிர்ப்புச்
சக்தியினை அதிகரிக்கத் துணை புரியும்!
குறைந்த மழைப்பொழிவில் செழிப்பாக வளர்கின்ற,
உருவில் சிறுத்தும், ஊட்டச்சத்து மிக்குளதுமான
வரகு, சாமை, கேழ்வரகு, கம்பு, பனிவரகு,
குதிரைவாலி, சோளம், காடைக்கன்னி இவையாவும்
சிறுதானிய வகையைச் சார்ந்தன என்றறிவோம்!
உரம், களைக்கொல்லி தேவையில்லை இவைவளர!
மானாவாரி நிலங்களிலும் அள்ளித்தரும் மகசூலை!
முன்னோர்கள் காலத்தே, அன்றாட உணவினிலே,
தின்பண்டங்கள் தனிலே, சிறுதானிய வகைகளுண்டு!
பண்டிகை நாட்களில்தான் அரிசி இடம்பிடிக்கும்!
அரிசியும் கோதுமையும் அதிகம் உணவிலே
சேர்க்கின்றோம் இந்நாளில்! பெருகிடுதே நோய்பலவும்!
பசுமைப் புரட்சிக்குப் பின்வந்த நிலையிதுவே!
இன்றைய தலைமுறைக்கு சிறுதானியம் புதிதாகும்!
இந்தியாவின் முன்னெடுப்பால் ஐநாசபை இவ்வாண்டை
சர்வதேச சிறுதானிய ஆண்டென அறிவித்தது
பெருமையன்றோ? வாய்ப்புள்ள இடங்களிலே வளர்த்திடுவோம்
சிறுதானியப் பயிர்களையும்! சேர்த்திடுவோம் உணவினிலே!
அரசுகளும் தீவிரமாய் முயற்சிபல செய்திடுதே!
ஏற்றுமதி செய்யும்வகை வளர்ப்போமே இப்பயிர்களையும்!
சர்வதேச சிறுதானிய ஆண்டான இவ்வாண்டை
வரவேற்போம்! சிறுதானியங்களை உணவில் சேர்த்திடுவோம்!
நலமுடன் நாமெல்லாம் இன்புற்று வாழ்ந்திருப்போம்!

கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி,புதுச்சேரி

# சனவரி-28 மொழிப்போர் தியாகிகள் தினம்

உலகம் பிறந்ததும் பிறந்த ஓசையேமொழிகளின் மூலம்
இயற்கையின் உன்னதப் படைப்பாம் மனிதன்
தன் தேவையைப்,
பிறர்க்குணர்த்தத் தேடினான், மொழியை.
மொழியே,இனம்,நாடு பண்பாடு
மொழிந்திடும்.
மொழி அழிந்திட இனமே அழிந்திடும்.
உலக மொழிகளின் தாயாம் தமிழைக் காத்திட
தங்கள் இன்னுயிர் நீத்தனர்,
தன்மான வீரர்கள்.
அன்னாரின் நினைவைப் போற்றி
வீரவணக்கம் செய்திடும் நாளே சனவரி-25.
இந்தித் திணிப்பை எதிர்த்து போராட்டம்.
முதல் களப்பலி நடராசன்.
அடுத்த பலி தாளமுத்து.
கூலிக்கு அமர்த்தப்பட்டக்
கூலிகள் சிறையில் பலி.
என்றார் இராஜாஜி.
இருவரின் உயிரிழப்பு
மாறியது,தொடர்போராட்டமாய்!
கொதித்தெழுந்தனர் பெரியாரோடு
தமிழ்ச் சான்றோர் பலரும்.
எழுபது பேர் தீக்குளிப்பு.
கலவரங்கள் வெடிப்பு.
காவலர்கள் கட்டுப்படுத்த
முடியா நிலை.
வன்முறை தீவைப்பு
தடியடி, துப்பாக்கிச்சூடு
இந்தித் துணிப்பு ஆதிக்கக் குறியீடாய் ஆவதில் வந்தது வெறுப்பு.
மொழியைக் கற்பது அவரவர் விருப்பு.
இன்றும் தொடர்கிறது இந்தி திணிப்பு.
என்றும் இல்லை இதற்கு முடிவு!




கவிஞர் செ.கலைவாணி,மேட்டூர்அணை

# மனசாட்சி

இல்லாததொன்றை
இருக்கின்றதாகக்
காட்டும் பொழுது
சிரிக்கும்!
பொல்லாத பொய்யை
மெய்யெனக் கூறி
உரைக்கின்ற பொழுது
உதைக்கும்!



நினையாததொன்றை
செய்கின்ற பொழுது
நிம்மதியை அது
குழைக்கும்!
செய்யாததொன்றை
நினைக்கின்ற பொழுது
காலத்தை காட்டியே
வதைக்கும்!

தனக்கென்ற ஒன்றை
பிறர் பெற்று விட்டால்
வாழ்வெல்லாம் முள்ளாகி
உறுத்தும்!
தனக்குள்ளதொன்றை
பிறர்கென்று கொடுத்தால்
கர்ணனின் பலத்தைக்
கொடுக்கும்!

கவிஞர் ரேச்சல் டிலானி

# சொப்பனம்




காரைக் கவிஞர் எழிலி

# கார்குழல்

உதிராமலே உலாவரும்
உதிர்க்க மனமின்றி
மோனநிலைக்குள்



மௌனம் பாஷைக்குள்
பரிவட்டம் கட்டி ஊர்வலம்
ஆதவனை அணைத்திடும்
வழியோயிது

சிமிட்டாமலே சில்லென்ற
சிதறல்
கார்குழலிசைக்கும்
தூறல் ராகம் சற்றே அழுத்தமாய்
திமிராய் கர்வமாய்

விடாது வீழ்ந்தால் விரயமென
அவிழ்க்காமலே
அலையலையாய் கலைந்தே
கவிதைமலர் போல்
ஓடிடும் அழகே அழகு

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# சாபக்கேடு

குழந்தைக்கு தகப்பன் வேண்டும்
கடைசியில் உனக்கு ஒரு துணை வேண்டும்
இரு வாக்கியங்களால்
உதைபட்டும் சாடப்பட்டும்
சந்தேகிக்கப்பட்டும்
சுயம் மறந்து
பல ஆணாதிக்க வியாதிகளின்
மனைவிகளாய் (வேலைக்காரியாய்)
பெண்கள் - மனித இனத்தின் சாபக்கேடு!



கவிஞர் நந்தியாதேவி புகழேந்திரன்,உதகை

# தந்தையின் தாலாட்டு



கருவில் சுமக்கவில்லை
கட்டியணைத்து கவிபாடி
தோளிலும் மார்பிலும்
தோழனாய் கைசேர்த்தாய்
உன்ஒற்றை விரலும்
உரம் கொடுத்திடும்
தன்னம்பிக்கை வேர்களை
தந்து வளர்த்திடும்

நானும் கவலைகளின்றி
வாழ்வதற்கு பாடுபட்டாயே
கடமைகள் காத்திட
நாளும் துன்பப்பட்டாயே
ஆதவனாய் ஒளிகொடுத்து
ஆருயிர் கொண்டாயே
மாதவனாய் இருந்து
மனங்களை வென்றாயே

வேதனைகள் சுமந்து
சாதிக்க வைத்தாயே
வேதங்கள் கற்றிட
வேட்கை வளர்த்தாயே
துணிவைக் கொடுத்து
தூணாக்கி விட்டாயே
பணிவைப் பழக்கி
பண்பாட்டைச் சொன்னாயே



இரவுபகல் பாராது
இன்னலும் கண்டாயே
வரவினைக் அளிப்பதற்கு
வள்ளலாய் இருந்தாயே
நெஞ்சத்தைப் பூட்டி
நேசத்தைப் புதைத்தாயே
மஞ்சமாய் மடிதனை
மகளுக்குத் தந்தாயே

இதயத்தில் இனிப்பாய்
இருத்தி ரசித்தாயே
உதயத்தை பார்த்திட
உச்சியில் ஏற்றினாயே
தந்தையெனும் கடவுள்
கிடைத்திட்ட வரமே
நித்தமும் நினைவில்
வாழுகிறேன் அப்பா

கவிஞர் கிருஷ் அபி, இலங்கை

# குலச்சிறை நாயனார்

கொடை வள்ளல்கள் வாழ்ந்த நகரம் மணற்மேற்குடி
சடையனைத் துதித்து வாழும் குலச்சிறையார் பிறந்த ஊர்
தடைஇல்லாமல் வரும் அடியவர்க்கு அள்ளி அள்ளி கொடுப்பவர்
மடை திறந்த வெள்ளம்போல் சிவபக்தியில் சிறந்தவர்

குலச்சிறையார் ஓங்கி வளரும் சமணத்தை வேர் அறுத்தவர்
குலம் காத்து சிவன் கோயில்களில் சிவ பூசைகள் தொடர்ந்தவர்
நலம் நாடி வரும் அடியார்கள் பாதம் பணிந்து அமுது படைத்தவர்
பலராலும் போற்றப்படும் பாண்டிய மன்னனின் முதலமைச்சர்

மன்னன் கூன் பாண்டியன் கரம் பிடித்தாள் மங்கையர்க்கரசி
தன்னவன் சமணத்தைத் தழுவ சவலையானது சைவ மதம்
மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி என்று சமணம் தழைத்தது
என்ன செய்வது எப்படி "சிவாய நம" நாட்டில் ஒலிக்கச் செய்வது

அரசி சம்பந்தர் திருமறைக்காடு வந்திருக்கும் செய்தி கேட்டாள்
பரமசிவனே திருமறைக்காடு வந்தது போல் மகிழ்ச்சியுற்றாள்
"சிரமம் பாராமல் சமணர்களால் தீங்கு நேரும் முன் அழைத்துவா"
தரம் பார்த்து தந்த பணியை முடிக்க மடத்துக்கு விரைந்தார்



திருமடத்தில் தங்கி இருக்கிறார் சம்பந்தர் செய்தி பரவியது
அருகனை வழிபடும் அமணர்கள் கூடிக் கூடி பேசினர்
திருஞானசம்பந்தரை தீர்த்துக்கட்ட முடிவு செய்தனர்
திருமடத்திற்கு தீ வைத்துக் கொளுத்த மடமே தீக்கிரையானது

தீயிட்ட மடமும் தங்கியிருந்த சிவனடியார்கள் தீக்கிரையாயினர்
தீ ஆளுடையாரை தீண்டவில்லை அன்றலர்ந்த மலராக நின்றார்
(தன்வினை தன்னைச் சுடும் வீட்டப்பம் ஒட்டைச் சுடும்)
தீ சுட்டது சமணர்களை, ஆதரித்து வந்த கூன் பாண்டியன்
தீப்பந்து வயிற்றில் சுழல வெப்பு நோயால் துடி துடித்தான்

பார்வதியின் பிள்ளை தப்பித்தார் மகிழ்ச்சி மகாராணியார்
பார்போற்றும் மன்னன், கணவன் நோய்க்கு கதறி அழுதாள்
நோயுற்ற மன்னனைக் காத்தருள அமைச்சரை ஏவினார் அரசியார்
பார்வதி பிள்ளையின் பாதம் பணிந்து அரசனுக்காக வேண்டினார்

ராணியார் மங்கையர்கரசியும் பாலகனின் பாதம் பணிந்தார்
ஞானியான சம்பந்தர் மன்னன் மேனியில் திரு நீறு பூசினார்
வீரியமான வெப்பு நோய் மாயமாய் மறைய மன்னன் குணமானான்
நீறின் மகத்துவம் உணர்ந்த மன்னன் சைவ மதத்தை தழுவினான்
(மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு , துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு , சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர்வாய் உமை பங்கன் திரு ஆலவாயான் திருநீறே !)

கூன் பாண்டியன் சிவாயநம கூற "நின்ற சீர் நெடுமாறன்" ஆனார்
கோன் பாண்டியனாக உலகம் போற்ற குலச்சிறையாரே காரணம் ஆனார்
மீன் கொடி பறக்கும் மதுரை கோயில்களில் சிவ பூசைகள் தொடங்கின
வான் முட்டும் ஐந்தெழுத்து மந்திரம் ஒலிக்கச்செயதவர் குலச்சிறையார்.

கவிஞர் ந.திருக்காமு,புதுச்சேரி

# மாட்டு வண்டி

(சிறுவர் பாடல்)



மாட்டு வண்டி மாமன் வண்டி
மாடு பூட்டி ஓடும் வண்டி
ஓல குடிச ஏழ வண்டி
சலங்க பூட்டி ஓடும் வண்டி

மனிதனை ஏற்றி செல்லுது பார்
மனிதன் வாழ உழைக்குது பார்
கிராமத்து எழில கூட்டுது பார்
பாட்டு இன்றி பாடுது பார்

சிட்டுக்கள் ஏற, விரும்பும் வண்டி
கிழடுகள் ஏறி ,ஓட்டும் வண்டி
தொட்டில் இன்றி,தாலாட்டும் வண்டி
எனக்கு நீதாண்டா சங்கீத வண்டி

கவிஞர் ஏ.ஆர்.ரசானா,கல்முனை(இலங்கை)

# ஹைக்கூ

கிளி ஜோசியம்,
மீண்டும் ஊருக்குள் திரும்புகிறது,
வேலையில்லா திண்டாட்டம்.



கவிஞர் அ.செல்வராஜ்.உடுமலைப்பேட்டை

# கிருபானந்த வாரியார்

(கட்டுரை)

முன்னுரை :



திருமுருக கிருபானந்த வாரியார் (25 ஆகத்து 1906 - 7 நவம்பர் 1993) சிறந்த முருக பக்தர் ஆவார். இலக்கியம், பேச்சுத்திறன், எழுத்துத்திறன், இசை போன்று பல துறைகளிலும் ஆழ்ந்த புலமை பெற்றவர். "அருள்மொழி அரசு", என்றும் "திருப்புகழ் ஜோதி" என்றும் அனைவராலும் பாராட்டப்பட்டவர். இவருக்கு, இசையாலும், புராணச் சொற்பொழிவாலும் இறைவன் புகழ்பாடி வந்த மல்லையதாசர் முருகப்பெருமானின் பல நாமங்களில் ஒன்றான "கிருபானந்த வாரி" எனும் பெயரைச் சூட்டினார்.

"கிருபை" என்றால் கருணை என்றும், "ஆனந்தம்" என்றால் இன்பம் என்றும், "வாரி" என்றால் பெருங்கடல் என்றும் பொருள். இவர் பெயருக்கேற்ப கருணையே உருவாக, பிறரை தன் சொற்பொழிவால் மகிழ்ச்சியில் ஆழ்த்தும் பெருங்கடலாகத் திகழ்ந்தார்.

பிறப்பு

தமிழ்நாட்டின், வேலூர் மாவட்டத்தில் உள்ள காட்பாடிக்கு அருகில் பாலாற்றங்கரையில் அமைந்துள்ள காங்கேயநல்லூர் என்னும் சிற்றூரில் மல்லையதாசருக்கும், மாதுஸ்ரீ கனகவல்லி அம்மையாருக்கும் பிறந்த பதினொரு பிள்ளைகளில் நான்காவது மகவாக அவதரித்தவர். ஐந்தாவது வயதில் திருவண்ணாமலையில், பாணிபாத்திர தேவர் மடத்தில் சிவலிங்க தாரணம் செய்விக்கப்பெற்றார்.

# கிருபானந்த வாரியார்

(கட்டுரை)

வாரியார் சுவாமிகள் அமிர்தலட்சுமியைத் தனது 19-ஆவது வயதில் கல்யாணம் புரிந்தார்.

## இயல்- இசை - கல்வி:

இவரது தந்தையார் இசையிலும் இயலிலும் வல்லவர், மாபெரும் புராண வல்லுநர். தந்தையாரே வாரியாருக்கு கல்வி, இசை, இலக்கிய, இலக்கணங்களைக் கற்றுத் தந்தார். எட்டுவயதிலேயே கவிபாடும் ஆற்றலைப் பெற்றவர். 12 வயதிலேயே பதினாயிரம் பண்களை மனப்பாடம் செய்தவர். பதினெட்டு வயதிலேயே சிறப்பாகச் சொற்பொழிவாற்றும் ஆற்றலுடையவராய் விளங்கினார். இவர் இயற்றியுள்ள வெண்பாக்கள் ஆயிரத்துக்கும் மேல் இருக்கும்.

வாரியாருக்கு 23 வயதானபோது, சென்னை ஆனைகவுனி தென்மடம் பிரம்மஸ்ரீ வரதாசாரியாரிடம் ஏறத்தாழ நான்கு ஆண்டுகள் வீணைப் பயிற்சி பெற்றார்.

தமிழ் இலக்கியத்திலும், ஆன்மிகத்திலும் தனித் திறன் பெற்றிருந்த இவருக்கு இவர் தந்தைதான் ஆசான். இவருடைய தந்தையார் இவருக்கு மூன்றாம் வயதிலிருந்து தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்றுக் கொடுக்கத் தொடங்கினார். எட்டு வயதிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்ற இவர் தேவாரம், திருப்புகழ், திருவருட்பா, கந்தபுராணம், கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலான நூல்களில் பத்தாயிரம் பாடல்களுக்கு மேல் அவர் மனப்பாடம் செய்துவிட்டார். கற்றறிந்த புலவருக்கே கடினமாக இருக்கும் அஷ்டநாக பந்தம், மயில், வேல், சிவலிங்கம், ரதம் முதலான பந்தங்கள், சித்திரக் கவிகள் முதலியவைகளை இயற்றினார்.

# கிருபானந்த வாரியார்

(கட்டுரை)

## திருப்புகழ் அமிர்தம்



சுவாமிகள் 1936 ஆம் ஆண்டு தைப்பூச விழாவுக்கு வடலூர் சென்றிருந்த சமயம், சத்திய ஞான சபையில் அமர்ந்து "திருப்புகழ் அமிர்தம்' என்ற மாதப் பத்திரிகையை வெளியிடக் கருதி "கைத்தல நிறைகனி' என்று தொடங்கும் திருப்புகழுக்கு உரை எழுதினார். அது முதல் திருப்புகழ் அமிர்தம் திங்கள் இதழாகப் பிரசுரமாகத் தொடங்கியது.

சுவாமிகள் அந்தப் பத்திரிகையை முப்பத்தேழு ஆண்டுகள் தொடர்ந்து நடத்தினார். அந்தப் பத்திரிகையில் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு திருப்புகழ் பாடலுக்கு விளக்கவுரையும், கந்தர் அலங்கார உரையும், கற்பு நெறிக்கதையும், வேறு பல கட்டுரைகளும் எழுதப்பட்டன. அந்தப் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரைகள் பின்னர்த் தொகுக்கப்பட்டு தனித்தனி நூல்களாகப் பிரசுரமாயின.

## சொற்பொழிவாளர்:

இசை மற்றும் புராணச் சொற்பொழிவாற்றி வந்த கிருபானந்த வாரியாரின் தந்தை மல்லையதாசர் ஒருநாள் சொற்பொழிவு ஒன்றுக்குப் போக முடியாத நிலை. தந்தைக்குப் பதிலாக அந்தச் சொற்பொழிவிற்கு வாரியார் சென்றார். சொற்பொழிவிற்கு ஏற்பாடு செய்திருந்தவர்கள், "மல்லையதாசர் சொற்பொழிவிற்கு வருவதாக ஒத்துக் கொண்டு, தான் வராமல் இளம் வயது மகனை அனுப்பி வைத்திருக்கிறாரே" என்று வருத்தப்பட்டனர்.

# கிருபானந்த வாரியார்

(கட்டுரை)

**சொற்பொழிவாளர்:**

வாரியார் அன்று முதன் முதலாக செய்த சொற்பொழிவைக் கேட்டவர்கள் அசந்து போய்விட்டனர். இந்த இளம் வயதில் இவ்வளவு அனுபவமா? என்று அவருடைய சொற்பொழிவைக் கேட்டவர்கள் மகிழ்ந்து போனார்கள். பதினெட்டு வயதில் சொற்பொழிவைத் தொடங்கிய வாரியாரின் பேச்சு, எளிமையான உரைநடையில் இருந்ததால் அதைப் படிப்பறிவே இல்லாதவர்கள் கூட எளிமையாகப் புரிந்து கொண்டார்கள். சிறுபிள்ளைகள் கூட இவருடைய சொற்பொழிவு என்றால் கேட்க விரும்புவார்கள். அவ்வளவு எளிமையாக இருக்கும். சொற்பொழிவில் அதிகமான நகைச்சுவைகள் அர்த்தத்துடன் இருக்கும்.

**எழுத்தாளர்**

வாரியார் சுவாமிகள் இலக்கியம் மற்றும் ஆன்மிகச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதில் மட்டுமில்லாமல் எழுதுவதிலும் சிறப்பு பெற்று விளங்கினார். இவரது திருப்புகழ் விரிவுரைகளைக் கேட்டு மகிழ்நத சிலர் திருப்புகழ் விரிவுரையை நூலாக எழுதி உதவ வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். வாரியார் 1936-ஆம் ஆண்டு தைப்பூசத் திருவிழாவுக்காக வடலூர் சென்றிருந்தார். அங்கு சத்திய ஞான சபையில் அமர்ந்து "திருப்புகழ் அமிர்தம்' என்ற மாதப் பத்திரிகையை வெளியிடக் கருதினார். அதற்காக "கைத்தல நிறைகனி" என்று தொடங்கும் திருப்புகழ் பாவுக்கு உரை எழுதினார். அது முதல் "திருப்புகழ் அமிர்தம்" எனும் மாத இதழைத் தொடங்கினார். இந்த இதழை சுமார் முப்பத்தேழு ஆண்டுகள் தொடர்ந்து நடத்தினார். இந்த இதழில் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு திருப்புகழ் பாடலுக்கு விளக்கவுரையும், கந்தர் அலங்கார உரையும், கற்பு நெறிக்கதையும், வேறு பல கட்டுரைகளும் எழுதினார். இந்தப் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரைகள் பின்னர் தொகுக்கப்பட்டு தனித்தனி நூல்களாக வெளியிடப்பட்டன.

# கிருபானந்த வாரியார்

## (கட்டுரை)

### எழுத்தாளர்



திருப்புகழ் அமிர்தம் என்ற இதழ் பலருடைய வாழ்க்கையைத் திருத்தியிருக்கிறது என்று வாரியார் சுவாமிகள் எழுதியுள்ள அவரது வரலாற்று நூலில் குறிப்பிட்டுள்ளார்.

சாதாரணமாக எழுதப் படிக்கத் தெரிந்த பாமர மக்களும் புரிந்து கொள்ளும்படியாக 500-க்கும் அதிகமான ஆன்மிகக் கருத்துக்களைக் கொண்ட கட்டுரைகளை எழுதியுள்ளார். இவையனைத்தும் இலக்கியத்தரம் வாய்ந்தவை மட்டுமன்றி, தெளிவான நடையில் அமைந்தவையும் ஆகும். இவர் 150க்கும் அதிகமான நூல்களையும் எழுதியுள்ளார். இவற்றுள் சிவனருட்செல்வர், கந்தவேள் கருணை, இராமகாவியம், மகாபாரதம் போன்றவை சிறப்பு பெற்றவை. இவரது சொற்பொழிவுகளில் 83 குறுந்தகடுகளாகவும் வெளியிடப்பட்டிருக்கின்றன என்பதும் இங்கு குறிப்பிடத் தகுந்தது.

### கண்ணதாசன் சந்தித்த போது:

"தாமரைக் கண்ணால் பெண்கள் நோக்கினர்" என்று கம்பர் கூறுகிறார். "தாமரையோ செவ்வண்ணம் உடையது. மது அருந்தியவருக்கும், அளவுக்கு அதிக சினம் கொண்டவருக்கும் அல்லவா சிவந்த கண்கள் இருக்கும். அது எவ்வாறு பெண்களுக்குப் பொருந்தும்?" என்று கண்ணதாசன் கேட்டார்,

அதை "தாம் அரைக் கண்ணால்"' என்று பிரித்துப் பொருள் கொள்ளலாம் அல்லவா?" என்று விளக்கம் கூறக் கவியரசர் அசந்து போனார்.

# கிருபானந்த வாரியார்

(கட்டுரை)

**இறை வழிபாடும் இறை சேவையும்:**




வாரியார் சுவாமிகள் வாழ்நாள் முழுவதும் கோயில், பூசை, சொற்பொழிவு என்று ஆன்மிக வழியில் சரியாகச் சென்று கொண்டிருந்தார். ஒருநாள் கூட முருகனுக்குப் பூசை செய்யாமல் இருந்ததில்லை. இவரின் மூச்சு கூட முருகா! முருகா!! என்றுதான் இருந்தது. தனி மனித ஒழுக்கத்தையும், பல நல்ல உபதேசங்களையும் வழங்கிய வாரியார் அதன்படி வாழ்ந்தும் காட்டினார். கார்த்திகை மாதம் சோமவாரம் (திங்கட்கிழமை) தொடங்கி ஐந்து சோமவாரம் உபவாசம் (உண்ணா நோன்பு) இருந்ததுடன் இவ்விரதத்தை தனக்குத் தெரிந்தவர்கள் அனைவரையும் இருக்கச் செய்தார்.

**மறைவு**

1993 ஆம் ஆண்டில் அக்டோபர் மாதம் லண்டன் நகருக்குச் சொற்பொழிவாற்றச் சென்றார். அங்கு திடீரென ஏற்பட்ட உடல்நலக் குறைவால் சிகிச்சை பெற்றுக் கொண்டு நவம்பர் மாதம் 6 ஆம் தேதி லண்டனிலிருந்து திரும்பினார். 7 ஆம் தேதி அதிகாலை மும்பை வந்து சேர்ந்தார். அங்கிருந்து காலை 6 மணிக்கு சென்னைக்கு விமானத்தில் கிளம்பினார். சென்னை வருவதற்கு முன்பாகவே அவர் உயிர் இறைவனிடம் சென்று சேர்ந்துவிட்டிருந்தது. நவம்பர் 8 ஆம் தேதியில் அவர் சமாதி நிலையடைந்தார்.

கவிஞர் அ.வில்சன்,இதழாசிரியர்


அகர முதல நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
BOSS
கட்டளையிட விரும்புபவன்
முதலில் பணிவதற்கு
கற்றுக்கொள்ள வேண்டும்
– அரிஸ்டாட்டில்
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.

தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com